**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2022ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 17ம் நாள் புதன்கிழமை</u>

**<u>அ.வ.எண்.195/2021 இல் இ.ம.எண்.02/2021</u>**

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தாலூக்கா, தேவராயபுரம், வேலாயுதம்பாளையம், கோட்டரை காட்டுத் தோட்டம், கதவு எண்.3/87C என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.பழனிச்சாமி (எ) சின்னத்துரை மனைவி சுமார் 53 வயதுள்ள திருமதி.லோகநாயகி.

... மனுதாரர் / வாதி

/ எதிர் /

1. பொள்ளாச்சி தாலூக்கா, சேர்வைகாரன்பாளையம், P.நாகூர், கருமன் காட்டுக்களம் என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.துரைசாமி மனைவி சுமார் 50 வயதுள்ள திருமதி.ஜோதீஸ்வரி.

2. பொள்ளாச்சி தாலூக்கா, சேர்வைகாரன்பாளையம், மாப்பிள்ளைகவுண்டன்புதூர், கதவு எண்.3/23 என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.கதிர்வேல் மனைவி சுமார் 38 வயதுள்ள திருமதி.கிருஷ்ணவேணி.

3. பொள்ளாச்சி தாலூக்கா, சேர்வைகாரன்பாளையம், P.நாகூர், கருமன் காட்டுக்களம் என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.மயில்சாமி கவுண்டர் மகன் சுமார் 55 வயதுள்ள திரு.துரைசாமி.

4. பொள்ளாச்சி தாலூக்கா, சேர்வைகாரன்பாளையம், மாப்பிள்ளைகவுண்டன்புதூர், கதவு எண்.3/23 என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.பஞ்சலிங்கம் மகன் சுமார் 43 வயதுள்ள திரு.கதிர்வேல்.

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

2012ம் வருடத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாக ஒப்பந்தத்தின்படி மனுதாரர் / வாதிக்கு ஒதுக்கப்பட்ட மனுச்சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ, அவரது ஆட்கள்

வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 26.07.2021

இம்மனுவானது கடந்த 05.07.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குமரவேல் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.P.காமாட்சிகுமார் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>இறுதி உத்தரவு</u>**

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

**<u>சொத்து விபரம்</u>**

**<u>'A' ஷெட்யூல் : (Plaint Doc. No.: 1)</u>**

கோயம்புத்துார் ரிடிடு, பொள்ளாச்சி சப்டிடு, பொள்ளாச்சி தாலுாக்கா, சேர்வகாரன்பாளையம் கிராமம் புலத்தில் 134 நெ.பட்டா க.ச.301/2 நெ. காலை பு.ஏ.4.37க்கு ரூ.5.99. இந்த பூமியும் இதில் உள்ள துருஸ்து கிணறு ஒன்றும் மாவடை மரவடையும் சகிதம்.

பின்னும் 1 இலக்கமிட்ட (முத்துசாமிக்கவுண்டரின் தகப்பனார்)

சிவன்மலைக்கவுண்டரும் அவரது மனைவி அங்கம்மாளும் மேலே கண்டபடி அனுபவித்து வந்து அவர்கள் ஆயுளுக்குப் பின் இந்த பாகஸ்தர் சுவாதீனம் செய்து கொண்டு சர்வ சுதந்திரமாய் அனுபவிக்கும் சொத்தின் விபரம்:

சேர்வகாரன்பாளையம் கிராமம்புலத்தில் க.ச.301/3 நெ. காலை பு.ஏ.3.45 க்கு ரூ.4.73. இந்த பூமியும் இதில் உள்ள துருஸ்து கிணறும் மாவடை மரவடைகளும் சகிதம். மேற்படி கிணற்றிலும் தண்ணீர் பாத்தியத்திலும் பொதுவில் சரிபாதி மட்டும்.

மேற்படி மாப்பிள்ளைக்கவுண்டன் புதுார் ஊர்க்கட்டில்,

| | |
|---|---|
| ஆல்சாமிக்கவுண்டர் பூமிக்கும் | ..... மேற்கு |
| கந்தசாமி கவுண்டர் காலியிடத்துக்கும் | ..... வடக்கு |
| 5 இலக்கமிட்டவர் (மயில்சாமி கவுண்டர்) பாக வீட்டு முன்வாசலுக்கும் | ..... கிழக்கு |
| 3, 4 இலக்கமிட்ட மைனர்கள் (சிவசாமி, சின்னச்சாமி) பாக வீட்டுக்கும் | ..... தெற்கு |

இதன் மத்தியில் உள்ள இடமும், இதில் உள்ள மேற்கும் வடக்கும் பார்த்த வில்லை வீடும் இதன் கிழபுறம் உள்ள தண்ணீர் கொட்டமும், தென்புறம் வண்டி வகையறா நிறுத்தும் பொது இடத்துக்கும் கிழபுறமாய் கிழகோடாக தென்வடல் முழம் 5, கிழமேல் முழம் 20. இந்த அளவுள்ள புரவடையும் மேற்படி பொது காலியிடத்தில் வண்டி வகையறா நிறுத்திக் கொள்ளும் பொது பாத்தியமும் 5, 6, 3, 4 லக்கமிட்டவர்கள் பாக வீட்டு முன் வாசல் வழியாக 2 இலக்கமிட்டவருக்கு மேற்படி சேந்து கிணற்றில் போய் தண்ணீர் சேந்திக் கொண்டு வர தட பாத்தியம் விட்டு விட வேண்டியது.

**<u>'B' ஷெட்யூல் : (Plaint Doc. No.: 2)</u>**

திருப்பூர் ரிடிடு, பொள்ளாச்சி சப்டி, பொள்ளாச்சி தாலூக்கா, ஜமீன் பொரவிபாளையம் தாக்கல் சேர்வகாரன்பாளையம் கிராமம் புலத்தில் 20 நெ. பட்டா க.ச.298/2 நெ. காலை பு.ஏ.6.90–க்கு ரூ.9.45. இதில்

| | |
|---|---|
| உங்களுடைய பாக பூமிக்கும் | ..... வடக்கு |

தென்வடல் இட்டேரிக்கும் ..... கிழக்கு

க.ச.298/2 நெ.யில் பச்சையம்மாள் பூமிக்கும் ..... தெற்கு

வேச்சப்ப நாயக்கர் பூமிக்கும் ...... மேற்கு

இதன் மத்தியில்,

பு.ஏ. 2.00–க்கு ரூ.2.74. இந்த 2 ஏக்கர் பூமியும் இதில் உள்ள பலன் தரும் தென்னைகள் 60–ம் பலன் தராத இளம் தென்னைகள் 60–ம் மேற்படி பூமியில் உள்ள வில்லை களத்துச்சாளையில் வடபுறம் உள்ள கிழக்குப் பார்த்த கைசாளையும் மேற்படி 554 of 67 நெ. பாகதஸ்தாவேசில் உள்ள படி மேற்படி பூமிக்கு போக வர உண்டான தட பாத்தியமும் சகிதம்.

இவ்வுத்தரவு 2022ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 17ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

--------------------------------

**இறுதி உத்தரவு**
அ.வ.எண்.195/2021 இல் இ.ம.எண்.02/2021
நாள் : 17.08.2022
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

--------------------------------